THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

FIRST SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

Tuesday, the 24th April 1962.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—OBITUARY REFERENCE.

MR. SPEAKER : இச் சபையின் முன்னாள் உறுப்பினர்களாக இருந்த திரு. ஜி. அண்ணாமலை முத்துராஜா, டாக்டர் பி. எஸ். ஸ்ரீநிவாசன், திரு. ஏ. காளேஸ்வர ராவ் ஆகியோரின் மறைவு குறித்த செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. அண்ணாமலை முத்துராஜா அவர்கள், 1902-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15-ம் நாள் பிறந்தார். திருச்சிராப்பள்ளி அருசன் நடுநிலைப் பள்ளியில் கல்வி பயின்றார். மாவட்டக் காங்கிரஸ் குழுவின் உறுப்பினராகவும், திருச்சிராப்பள்ளி நகராட்சியின் முன்னாள் தலைவராகவும், திருச்சிராப்பள்ளி மாவட்ட வணிகர்கள் சங்கத்தின் தலைவராகவும், திருச்சிராப்பள்ளி நகராட்சிக் கவுன்சிலராகவும், சமாதான அமைப்புத் தலைவராகவும், 1957-62 வரை இச் சபையின் உறுப்பினராகவும் இருந்து நல்ல முறையில் பணியாற்றி உள்ளார்கள். இவர், 1962 ஜனவரி 27-ம் தேதி மறைந்தார்.

டாக்டர் பி. எஸ். ஸ்ரீநிவாசன் அவர்கள், 1893-ம் ஆண்டில் பிறந்தார். மருத்துவப் படிப்பை முடித்தபின், அரசாங்கப் பணியில் இரண்டாண்டுக்காலம் இருந்தார். காஞ்சிபுரத்தில் சொந்தத்தில் மருத்துவத் தொழிலைத் துவக்கி, அங்கேயே தங்கினார். கடந்த 25 ஆண்டு காலமாக காங்கிரஸ் நடவடிக்கைகளில் தீவிரப் பங்கு எற்றிருந்தார். 1937-ல் தமிழ்நாடு சட்டசபையின் உறுப்பினராயிருந்தார். 1949-ல் செங்கற்பட்டு பொதுத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காஞ்சீபுரம் நகராட்சிக் கழகத்தின் தலைவராகச் சில ஆண்டுகள் இருந்து, நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். 1962-ம் ஆண்டு ஜனவரி 27-ம் தேதி மறைந்தார்.

திரு. ஏ. காளேஸ்வர ராவ் அவர்கள், கிருஷ்ணா மாவட்டத்தில் நந்திகாமா என்னுமிடத்தில் 1881-ல் பிறந்தார். மசூலிப்பட்டணம் நோபுள் கல்லூரியில் உயர்கல்வி பயின்று, அங்கு பி.ஏ. பட்டம் பெற்றார். 1937-39, 1946-51 ஆகிய ஆண்டுகளில் சென்னை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராயிருந்து பணியாற்றினார். மாநில சுயாட்சியின்கீழ் திரு. சி. ராஜகோபாலாச்சாரி அவர்கள் முதலில் அமைத்த அரசாங்கத்தில் அவர் தலைமைக் கொறடாவாகவும் தலைமை பார்லிமெண்டரி செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். 1955-ல் விஜயவாடா நகரத்திலிருந்து ஆந்திரச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆந்திரப் பிரதேசம் அமைக்கப்பட்டபிறகு, 1956-ல் அச் சட்டசபையின்

[Mr. Speaker] [24th April 1962

தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1960ல் அவருக்குப் "பத்மபூஷன்" என்னும் விருது அளிக்கப்பட்டது. 1962 பிப்ரவரி 26-ம் தேதி மறைந்தார்.

இவர்களின் மறைவுக்கு இச் சபை அனுதாபத்தைத் தெரிவிக்கும் முறையில் யாவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றார்கள்.)

II.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Old age pension

* 1 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the details of the scheme for granting old age pension to aged destitutes;

(*b*) the number of persons so far benefited by this scheme; and

(*c*) the expenditure anticipated to be incurred during 1962–63 in respect of this scheme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) A statement [a] is placed on the table of the House.

(*b*) The scheme takes effect only from 1st April 1962. The number of persons benefited by the scheme will be available only after the working of the scheme for some time.

(*c*) A provision of Rs. 2 lakhs has been made in the Interim Budget for 1962–63.

SRI M. KALYANASUNDARAM : இந்தத் திட்டம் வரவேற்கத் கூடிய ஒரு திட்டம். தேர்தலுக்கு முன்பு இந்தத் திட்டத்தைப் பற்றி பிரசாரம் செய்யும்போது இருந்த வேகத்தை இப்போது அமுல் நடத்துவதற்கும் காட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன். தவிர இதற்கு ஒதுக்கி இருக்கக்கூடிய நிதி போதுமானதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முதல் வருஷத்தில் அதிகமாக செலவு ஆகாதென்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்போது 2 லட்சம் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தைப்பற்றி அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிற அக்கறையைப்பற்றி கனம் அங்கத்தினருக்கு ஐயம் வேண்டாம்.

SRI M. KALYANASUNDARAM : இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கிற ரூபாய் தொடர்ந்து வருஷா வருஷம் ரிகரிங் செலவாக இருக்கக்கூடியது. அப்படி இருக்க பிரதி வருஷம் எவ்வளவு செலவாகும் என்று சர்க்கார் எதிர்பார்க்கிறது?

[a] Printed as Appendix I on pages 145–146.